ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

विरूपतां सर्वजनादवज्ञां सर्वत्र दैन्यं निजबुद्धिमान्द्यम् ।
वृद्धत्वसंभावितदुर्दशां तां विचार्य को वा विरतिं नयाति ॥

தன் சரீரத்திற்கேற்பட்ட விகாரத்தையும் சமஸ்தஜனங்களாலும் செய்யப்படும் அவமானத்தையும், எப்பொழுதும் தனக்கேற்படும் தைன்யத்தையும், தன் புத்திக்குண்டாகும் குறைவையும் மற்றுமுள்ள முதிர்ந்த வயதிலேற்படும் துர்தசையையும் கவனித்தால் எவர்களுக்குத்தான் ஸம்ஸாரத்திலிருந்தும் ஒழிவுண்டாகாது.

யௌவனகாலத்தில் அதிக அழகால் நமக்கு கர்வத்தைக் கொடுத்த மேனியானது, கிழத்தனம் வந்தவுடன் கூனல், குருகல், தேம்பல், வழுக்கை முதலானவைகளால் விகாரபாவத்தையடைகின்றது. அச்சமயத்தில் பத்நீ புத்திரன் பந்து முதலிய முக்கியமான ஜனங்களும் அவமதிக்கிறார்கள். கிரமமாய் புத்திக்கும் வலிமை குறைந்துவிடுகின்றது. மனிதர்களுக்கு வயது அதிகமாய்விட்டால் பலவிதத்தாலும் அக்காலத்திலுண்டாகும் கஷ்டங்களை நன்கு விசாரித்து கவனித்தால் எவர்கள்தான் 'இந்த ஸம்ஸாரம் ஸாரமில்லை. அதிக துக்கத்திற்கு இருப்பிடம். இனிநாம் இவ்வித துக்கத்தை யடையக்கூடாதெ'ன்று வைராக்கியத்தையடைந்து பிறப்பிறப்பு இல்லாமல் இருக்கவேண்டிய ஸாதனங்களைத்தேட முயற்சிக்கமாட்டார்கள்.

சிராத்தம்.

இந்த அபிப்பிராயமே,

प्रथिता प्रेतकृत्यैषा पित्र्यं नाम विधुक्षये ।

என்று மனுவாலும்

अथ श्राद्धममावास्यायां पितृभ्यो दद्यात् ।

என்று கௌதமராலும்

यथाकथंचिन्नित्यानि कुर्यादिन्दुक्षयादिषु ।

என்று ஹாரீதராலும்

श्राद्धं श्रद्धान्वितः कुर्वन्प्रीणयत्यखिलं हि तत् ।
मासि मास्यसिते पक्षे .... ॥

என்று விஷ்ணுபுராணத்திலும்

प्रमीतपितृकः कुर्यात् दर्शाब्दिकमहालयान् ।

என்று ஒரு ஸ்மிருதியிலும் கூறப்பட்டிருக்கின்றது. இவ்விதம் அவசியம் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்ட தர்சசிராத்தம் முதலியவைகளை ஒருவன் அனுஷ்டிக்காமல்போனால் அவன் 'இந்த ஜன்மாவில் விசேஷ பாபத்திற்குள்ளாகி, பலஜனங்களால் நிந்திக்கக்கூடிய ஸ்திதியை அடைந்து, முடிவில் பதினான்கு ஜன்மா சண்டாளனாக உண்டாகிறான்' என்று,

निर्वर्तयति यच्छ्राद्धं प्रमीतपितृको द्विजः ।
इन्दुक्षये मासि मासि प्रायश्चित्तीयते हि सः ॥ (व्याघ्रः)

दर्शश्राद्धमतिक्रम्य यो भुङ्क्ते तु नराधमः ।
चण्डालत्वमवाप्नोति जन्मानि नव पञ्च च ॥ (कार्ष्णाजिनिः)

ஸ்மிருதிகளில் கூறப்பட்டிருக்கின்றது. ஆகையால் நாம் பாபத்திற்குள்ளாகாமலிருக்கவேண்டி श्राद्ध என்கிற இந்தக் கர்மாவை அவசியம் அந்தந்தக் காலங்களில் செய்தேதீரவேண்டும். என்று சாஸ்திரங்கள் போதிக்கின்றன. இந்த விஷயத்தில் சில ஜனங்கள் பலவாறு சங்கிக்கிறார்கள். அவையாவன, "தம்தம் குலத்தில் மரித்த மாதாபிதா முதலானவர்களுக்குப் பசி தாகம் முதலியவைகளில்லாதிருக்கவேண்டி சிராத்தம் என்கிற இந்தக் கர்மா அவசியம் செய்யவேண்டியதுதானா? (1) அப்படியிருந்தால் ஒரு குலத்தில் எவ்வளவோ மனிதர்கள் இறந்திருக்கக் கூடுமே? அவர்கள் எல்லாருக்கும் சிராத்தம் செய்யவேண்டுமே? அப்படி எல்லாருக்கும் சிராத்தம் செய்கிறதாயிருந்தால் எப்பொழுதும் இந்த வேலையைத்தவிர வேறுவேலையைக் கொஞ்சங்கூடக் கவனிக்கவேமுடியாது. அன்றியும் மரித்தவர்களில் சிலர் புண்ணிய விசேஷத்தால் முக்தர்களாயிருந்தால் அந்த சிராத்தத்தால் அவர்களுக்கு என்ன பிரயோஜனம்? இவ்விதக் காரணங்களைக்கொண்டு இறந்த சில மனிதர்களுக்குத்தான் சிராத்தம் செய்யவேண்டுமென்றால் அச்சிலர்களையும் இன்னாரென்று தெரிந்துகொண்டு பிறகு சிராத்தம் செய்யமுடியுமே யல்லாது வேறுவிதம் முடியாது. இறந்த அச்சிலரும் சிராத்தம் செய்கிற இடத்திற்கு வருகிறார்களா? இல்லையா? ஆவாஹன மந்திரங்களால் அவர்களே சிராத்தம் செய்யுமிடத்திற்கு வருகிறதாகத் தெரிகிறது. நம்போன்ற அக்ஞானிகளுக்குத் தெரியாவிட்டாலும் இவ்வுலகில் யாராவது ஒரு மஹானுவது பார்த்துச்சொன்னதாகத் தெரியவில்லை. ஆகையால் சிராத்தம் செய்யுமிடத்திற்கு அவர்கள் வரவில்லையென்றே தெரிகிறது. ஆனால், இவ்விடத்திற்கு அவர்கள் வராவிட்டாலும் அவர்களிருக்குமிடத்திற்கு இங்கிருந்து ஸாமான்களை அனுப்புவோமென்றாலோ, அவர்கள் எந்த இடத்தில் தம் கர்மாவினால் எந்தமாதிரி ஜன்மாவை யடைந்திருக்கிறார்களோ அதை யாருமறியோம். அவர்

களாவது தற்காலத்தில் ஸங்கதிகளைத் தெரிவிக்கக்கூடிய கடிதம், தந்தி முதலிய ஸாதனங்களால் தேசாந்திரத்திலிருக்கும் மித்திரர்கள் சங்கதிகளையறியும்படி செய்வதுபோல் யாதாகிலுமோர் ஸாதனத்தைக்கொண்டு தங்களிருக்குமிடத்தைத் தெரிவித்தார்களோவென்றால் அதுவுமில்லை. அவ்விதம் இருந்தால் ஸாமான்களை அனுப்பவும் சமாசாரங்களை விபரமாய்த் தெரிந்துகொள்ளவும் முடியும். வேறுவிதமாய் யுக்திசெய்து ஸாமான்களையனுப்ப மார்க்கத்தையும் காணோம். இன்னும் அதிகபுண்ணிய விசேஷத்தால் அமிருதத்தையுண்டும் தேவதைகளாயிருந்தால் நம்மால் கொடுக்கப்படும் அன்னம் அவர்களுக்கு எப்படி உபயோகப்படும்? அவர்களுக்கு உபயோகப்படும்படியான ஆகாரத்தை யாரால்தான் கொடுக்கமுடியும்? இவ்விதமே, அதிக பாபகர்மாவால் பசு, பூனை, கிரி, பாம்பு, விருக்ஷம் முதலிய ஜன்மாவை யடைந்திருந்தார்களாகில் நம்மால் கொடுக்கப்படும் அன்னாதிகள் அவைகளுக்கு உபயோகமில்லாமல்போகும். பின்னும் இறந்த நம் பிதுர்க்களை உத்தேசித்து சிராத்தம் என்கிற ஒரு கர்மாவானது ஒரு வருஷத்திற்கு ஒரு நாளில் சுமார் 12 மணி ஸமயத்தில் செய்யப்படுகின்றது. இவ்விதம் வருஷத்திற்கு ஒருநாளில் செய்யப்படும் இந்தக்கர்மாவால் அவர்களுக்குப் பசிதாகம் இல்லாமலிருக்க எப்படிமுடியும்?

(இன்னும் வரும்)

பாதிவ்ரத்யம்.

तृणाय मत्वा पतिमङ्गनाभिर्यत्पूर्वमाचारविरुद्धमात्तम् ।
तस्येह जन्मन्यखिलं फलं ता वैधव्यरूपं विधिनाप्नुवन्ति ॥

இதன் பொருள்.

முன் ஜன்மத்தில் ஸ்திரீகளால் (பர்த்தாவைத் திருணத்திற்கு மொப்பாகப் பாவிக்காமல்) ஆசாரத்திற்கு விரோதமான யா

தொரு கிருத்யமானது ஸ்வீகரிக்கப்பட்டதோ, அதன் பலமான கணவனில்லாக்குறையை இந்த ஜன்மத்தில் தவத்தால் அவர்கள் அடைகிறார்களென்பதேயாம்

வேதசாஸ்த்ர புராணாதிகளை அனுஸரித்த ஆன்றோர்கள் செய்துவரும் அனுஷ்டானங்கள் இக்காலநாகரீகர்களால் வெறுக்கப்பட்டவையே ஆயினும் அவைகளால் நேரிடும் பயனின்மையை அவர்கள் தங்களது முதிர்ந்தவயதில் தெரிந்துகொண்டு துயரமடைகிறார்களென்பதை அனேகரின் சூடாகிருத்யங்களாலும், அகம்யாகமனங்களாலும் இவைபோன்ற பல துர்நடத்தைகளாலும் தெரிந்துகொள்ளலாம். அன்றியும், அன்பர்களே! அவர்கள் வாழ்நாட்களை வீணாகப்போக்கி, வர்ணாச்ரமத்திற்குரியதான தர்மங்களை நழுவவிட்டு, தனஸந்தானங்கள் இல்லாக்குறையால்

प्रक्षाळनाद्धि पङ्कस्य दूरादस्पर्शनं वरम् ।

என்ற வடமொழி நீதியை ஓராமல் வருந்திப் பின் அவற்றை நடத்த முயலுகிறார்கள். இதற்கு நிதர்சனமாகப் பத்மபுராணத்தில் கூறியிருக்கும் 'திவ்யாதேவி' என்றவோர் ராஜ நந்தினியின் வரலாற்றை நவிலுகிறேன். அமரகண்டகம் எனப்பெயர் பூண்ட நர்மதாநதியின் தென்கரையில் அதிவிசாலமாயும், குளிர்ந்ததாயுமுள்ள ஆலமரம் ஒன்றுண்டு. அங்கு தன் பூர்வஜன்ம தபோவிசேஷத்தால் பலநூற்றாண்டுகளாக ஜீவித்திருக்கின்ற குஞ்சலம் என்ற ஒரு கிளியானது தன்னன்பிற்கிசைந்த காதலியுடன் தம்மை இன்சுவையான தின்பண்டங்களாலாதரிக்கும் உஜ்வலன் என்றும், ஸமுஜ்வலன் என்றும், விஜ்வலன் என்றும், கபிஞ்சலன் என்றும் பெயருள்ள நாலு குழவிகளாலும் பரிபோஷிக்கட்டு வரும்பொழுது, ஒருநாள் தந்தையான குஞ்சலன் என்ற கிளியானது வழக்கம்போல் புதல்வரால் அளிக்கப்பட்ட ஆகாரங்களை அருந்தி, மிகுந்த ஸந்தோஷத்துடன் அவைகளைத் தன்னிறகுகளால் அணைத்துமுதலில் தன் ஜ்யேஷ்டகுமாரனாகிய உஜ்வலனைநோக்கி "அப்பா! என் கண்ணிமையே, இன்றைத்

தினம் ஆகாரார்த்தம் எங்குச் சென்றனை? அங்கு ஏதேனும் ஆச்சர்யமுண்டா?" என, உஜ்வலன் என்ற தத்தைக்கிளி வணக்கத்துடன் தன் சரித்திரத்தைக் கூற ஆரம்பித்தது. "தாய்தந்தையரே, அன்பார்ந்த ஸஹோதரர்களே, யான் இன்றைத்தினம் ப்லக்ஷத்வீபம் சென்றிருந்தேன். அந்த த்வீபமானது அனேகம் தேசங்களா லமைக்கப்பட்டது. வாபீகூபதடாக பர்வத விசேஷங்களால் க்ஷாமமறியாது க்ஷேமமாகவேயிருந்தது. அனேகம் கிராமங்களாலும், பட்டணங்களாலும் பார்ப்போர் மனத்தை ஸதா வியக்கச் செய்துகொண்டுமிருந்தது. அந்நகரில் யாவரும் மாடமாளிகை கூடகோபுராதிகளில் தம் தம் தர்மகாதலியுடன் உலாவிக்கொண்டும், ஸதா தானம் புண்யம், நீதி, சிரத்தை இவைகளில் பற்றிய சித்தத்துடனு மிருப்பார்கள். இவ்வழகுவாய்ந்த நகரில் ஸத்யதர்ம பாரயணராயும், புண்யவானுயுமுள்ள திவோதாஸன் என்ற ஒரு வேந்தன் ஸதா நீதி நெறிதவாது புவியாண்டுவந்தான். அம்மன்னவனுக்கு வனிதாரத்னங்களுக்கு உறைகல்போலவும், திலகம்போலுமுள்ள ஒரு புதல்வியானவள்

आनन्दग्रन्थिरेकोऽयमपत्यमिति कथ्यते ।

என்ற வடமொழிப்படி 'பெற்றோர்களுடைய ஆனந்தாதிசயந்தான் குழந்தையாகப் பரிணமித்திருக்கின்றதோ' எனத்தோற்றும்படியாக விளங்கினுள். இத்தையலின் தந்தையான திவோதாஸனுமொருநாள் தன் குமாரியாகிய திவ்யாதேவியானவள் விவாஹத்திற்குரிய வணக்கத்துடன் இருப்பதை அறிந்து திவ்யலாவண்யத்தால் தன் பெயரை அந்வர்த்தமாகச் செய்யும் இப்பூங்குழலுக்கு அநுரூபனை வரன்யாவன் எனக்கருதி கடைசியாக ரூபதேசத்தையாண்டுவரும் சித்ரஸேனமஹீபாலனுக்கு மணமாலை சூட்டுவிப்பதாக நிச்சயித்து, விவாஹத்திற்குரிய ஸகல கார்யங்களையும் ஸன்னத்தம் செய்து, ஆங்காங்கு மண வோலையனுப்பி, விவாஹகாலம் சமீபித்திருக்குங்கால் இம்மின்னற்கொடியாளின் மணவாளனை சித்ரஸேனமகீபாலன் ப

லோகப்ராப்தி அடைந்தனன். தத்க்ஷணமடங்காத் துயரமுற்ற திவோதாஸன் என்ற வேந்தனும் அனேகம் இருபிறப்பாளர்களின் முன்னிலையில் இச்சரிதத்தைவிள்ள அவ்வந்தணரனைவரும் ஒருமித்துச் சொல்லுவதாவது ஓ குற்றமற்ற கொற்றவா, தர்மசாஸ்திரத்தின் கோட்பாடுகளை உணருங்கால் இக்காரிலிழையை மறுவிவாஹம் செய்து கொடுப்பதில் ஐயமில்லை. தர்மசாஸ்திரமானது,

विवाहो जायते राजन् कन्यायास्तु विधानतः ।
पतिर्मृत्युं प्रयात्यस्या नोचेत्सङ्गं करोति च ॥
महाव्याध्यभिभूतश्च त्यागं कृत्वा प्रयाति वा ।
प्रव्राजितो भवेद्राजन् धर्मशास्त्रेषु दृश्यते ॥
उद्वाहितायां कन्यायामुद्वाहः क्रियते बुधैः ।
न स्याद्रजस्वला यावदन्येष्वपि विधीयते ॥
विवाहं तु विधानेन पिता कुर्यान्नसंशयः ।

இதன் பொருள். ஹே ராஜன் இக்கன்னிகைக்கு விதிவழுவாது விவாகம் நடைபெறும். பதியானவன் மரித்துவிடுவன். ஒரு சமயம் ஜீவித்திருப்பானுகில், இவளுடன் சம்பந்தம் ஏற்படாது. பெருவியாதியால் பீடிக்கப்பட்டு, இவளைவிட்டு விலகி ஸந்நியாஸாச்ரமம் புகுவன். மறுபடி படி உம் குமாரிக்கு உம்மால் விவாகம் நடைபெறுமென தர்மசாஸ்திரங்களில் காணப்படுகின்றது.

என்று சொல்லி மங்களாட்சதை அளிக்க, மட்டற்ற மகிழ்ச்சியுற்ற மன்னனும் ரூபஸேனமகீபாலனுக்கு மணமாலை சூட்டுவதாக நிச்சயித்திருக்குங்கால் முன்போல அக்கொற்றவனும் மாண்டனன். உடனே அரசனும் 'ஹா இனி என்னசெய்வது? 'பட்டகாலிலேபடும் கெட்டகுடியேகெடும்' என்ற உலகவாய்மை

நமக்காகத்தானேற்பட்டுளதோ!' எனக்கதறி ஸ்வயம்வரத்திற்காக ஸன்னத்தம்செய்ய அவ்வரசர்களும் தம்தம் ஆடையாபரணமணிந்து மணப்பந்தலேகினதும் திவ்யாதேவியின் உபமையற்ற ரூபலாவண்யத்தை நோக்கி, 'இவள் நம்மால் எளிதில் அடையப்பட்டவளல்ல; நாம் இவ்வனிதாரத்னத்தைக் கைக்கொள்ளவேண்டுமானுல் இம்மணப்பந்தலிலே கூடியிருக்கும் வேந்தர்களை வென்றபின்தான் மணம் செய்வது தகுதியாகவும் சுலபமாயுமிருக்கும்" என்று ஒவ்வொருவரும் தமக்குள்ளே கருதிப் போர்புரிந்து மாண்டுபோயினர். இச்செய்தியை அறிந்த திவ்யாதேவி என்ற ஏந்திழையும் 'இனி நம்முடைய யத்தினத்தில் கிஞ்சித்தேனும் பயனில்லை. ஸர்வஜகத்வல்லபரான ஈசுவரனே ரக்ஷகர்' எனக்கருதி ஒரு பெரிய பர்வதத்தின் குஹாத்வாரத்தைத் தன் வாஸஸ்தானமாகச் செய்துகொண்டு லதைபோன்ற சரீரத்தில் வெறுப்புற்று 'ஹா, தைவமே! இவ்விளம்வயதில் யான் கணவனில்லாக் குறையால் கஷ்டப்படத்தக்க அபராதம் என்ன செய்தேன். ஆதியில் ரூபதேசமகீபாலரான சித்ரஸேனனை மணம்புரிய மந்திரிகளும் வேதியர்களும் தீர்மானிக்க தேவரீர் அது ஸஹியாது அவரை உயிர்துறக்கச் செய்தீர். இத்துயரத்தை ஆற்ற மறு விவாகத்திற்கு ஸன்னத்தம் செய்த என் தந்தையின் நோக்கத்தையும் பங்கப்படுத்தினீர். அதுதானிருக்கட்டும், தேவரீர் ஸ்வயம்வரத்திற்காக அநேக அரசர்களை வரவழைத்தோமே, அவர்களாலாவது என் மனோரதம் நிறைவேறக்கூடாதா? அந்தோ! தெய்வமே! யான் என்ன கொடும் பாபம் செய்தேனோ! இவ்வடங்காத் துயரத்தால் தாய்தந்தையர் அறியாது கரி, பரி, நரி முதலிய ஸகலப்ராணிகளும் நிர்பயமாய்ச் சஞ்சரிக்கும் இவ்வனுந்திரத்தில் ஸகாயமின்றித் துயரப்படும் தமது அடியாளைக் காத்தருளலாகாதா?' எனப்பற்பலவாருக அழுதகண்ணும், சிந்தியமூக்கும், துடைத்தமுகமாக புலம்பிக்கொண்டிருக்கிறுள். ஆகையால் தேவரீர் இதன் ஏதுவைத் திருவாய்மலரவேண்டும்" என; குஞ்சலன் என்ற கிளி சொல்வதாவது:—

"செல்வர்களே! முற்பிறப்பிற்செய்த பாபகிருத்யங்களின் பயனை அனுபவிக்கிறாள். இம்மாது சிரோமணியின் வரலாற்றை நவிலுகிறேன் கேண்மின். பரவையாடையணிந்த பாக்யநகரி லொன்றான வாராணஸீ என்னும் பட்டணத்தில் மஹாப்ராக்ஞுனை சுவீரன் என்ற ஒரு வைச்யன் தனதான்ய லட்சுமியால் ஆதரிக்கப்பட்டு வரும்நாளில், தான் சித்ரா என்ற ஒரு கன்னிகையை மணம் செய்துகொண்டான். சிலநாட் சென்றபின் அவள் நடத்தைகள் மேதினியார் ஒப்பத் தகாதவையாகவே யிருந்தன. குலாசாரத்தை நழுவவிட்டதுமல்லாது ஸதா அனுசாரமாகவுமிருப்பாள். தன்னிஷ்டப்படி அண்டைவீட்டுப்பெண்டிருடன் கூடிக்குலாவுவாள். எங்கேயாவது நாலு புருஷரைக் கண்டால் அவர்களுடன் இவளுமோர் ஆடவனைப்போல் நடிப்பாள். இப்பெண்மணியை நாலுபேரறியக் கண்டித்தால் வீண் தெருக்கோலத்துடன் மானபங்கமதிகரிக்கும் என ரஹஸ்யமாகக் கணவன் கண்டித்தால் 'பேசினால் ஒட்டிக்கொள்ளுகிறதோ தாங்கள்மட்டும் பேசினால் தங்கள் பாத்யதை எனக்குக் கிடையாதோ' என்பாள். வெகு தூரத்திலிருக்கும் பெண்டிருடனும் ஆடவருடனும் வீண் கலகம்செய்து சண்டைகளை விலைக்கு வாங்கிவருவாள். தன் நாயகனை நிந்திக்கமாத்ரமில்லத்தில் இல்லாளா யிருப்பாளேயொழிப மற்ற ஸமயங்களில் வலைபோட்டும் காணமுடியாது. 'யாரிடத்தில் என்ன குற்றமிருக்கின்றது. யார் யார் என்ன சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்று தனக்கு ஸம்பந்தமற்ற அன்னியரின் சித்ரங்களிலேயே கண்ணாகவிருப்பாள். ஸாதுஜனங்களை ஸதா நிந்திப்பதுடன் எல்லாரையும் பரிஹஸிப்பாள். சில நாட்களில் அந்த வைச்யனும் அறிவிலியான அந்த நங்கையை விலக்கி மறுமணம் செய்துகொண்டனன். அதுமுதல் சாரசோரகிருத்ய சிகாமணியாகிய சித்ரா என்ற அந்தத் தையலும் ஒவ்வொரு தேசாந்திரமும் சென்று துஷ்டர்களின் ஸகவாசத்தால் அனேகம் பாபங்களையும், அனேகருக்குத் தாஸ்யத்தொழிலையும் செய்துவந்தாள். அத்துடன் அல்லும்பகலும் ஸாதுக்களினில்லச் சுவர்களை இடிப்பாள். தம்

கார்யத்தை நோக்கிச்செல்லும் கற்பிற்கரசியாங் காரிகைகளைத் தெருவில் நின்றழைத்து ஏமாற்றுவாள். அனேகம் ஸாதுக்களின் ஸ்திரீகளைத் தன்வசம் செய்து, அவர்களைத் தம் புருஷனண்டை யணுகாது மற்றொருவனைக் கொள்ளச்செய்வாள் இதுபோல் அனேகம் ஆடவரிடத்திலும் அவரவர் காதலியாளைச் சரியான யுக்தியால் குறைகூறி மறு மணம்புரியத் தூண்டுவாள். அன்றியும், துஷ்டநிக்ரஹம் செய்யும் யமதர்ம ராஜனையும் ஒருக்ஷணமாவது ஒழிவுடன் வைத்திராது அனேகம்போர்களைச் செய்விப்பாள். இவ்விதமனேகம் இல்லங்களைக்கெடுத்துவிட்டுத் தன்னால்மாண்டவரின்ஸங்கியையை அறியும்பொருட்டு கடைசியாகத் தானும் யமகிரகத்திற்கு அதிதியானாள். அவளே இப்பெண். ஆகையால் என்னருமைச் சேய்களே! முற்பிறப்பிற்செய்தகொடும் பாபமேயல்லாது வேறில்லை" என, உஜ்வலன் சொல்லுவதாவது, "தேவரீர் யாதுகாரணத்தால் இவளுக்கு ப்லக்ஷத்வீபாதிபதியாகிய திவோதாஸனின் புதல்வியாக ஜனிக்கும் பாக்யம் கிடைத்தது" என்று தன் சந்தேகத்தை வினவக் குஞ்சலன் கூறுகிறான்.

"இப்பெண்மணியின் பூர்வஜன்ம புண்ய பரிபாகமானது, இவ்வுத்தம குலத்தை அடையச்செய்தது. அதாவது முன்னொரு காலத்திலோர் ஸித்தரானவர் பூப்ரமணம் செய்துவருங்கால் நல்லவஸ்திரமின்றிக் கந்தையைத் தரித்துக்கொண்டு தண்டஹஸ்தராயும், தம்மிருகரங்களையே பாத்ரமாகச்செய்துகொண்டும், மௌனியாயும், ஜிதாத்மாவாயும், ஜிதேந்திரியராயும், ஜிதாஹாரராயும், எல்லா தத்துவங்களையுமறிந்தவராயும், வெகுதூரம் நடந்துவந்ததால் சிரமமுடையவராயும், ஏதோ ஒரு சிந்தையினால் கலங்கின சித்தமுடையவராயும் இருந்துகொண்டு அந்த சித்ராவென்ற தையலின்வீட்டண்டை நிழலில் தங்கியிருந்தார். ஏதோ ஒரு கார்யார்த்தமாக வெளியில்வந்த சித்ராவென்ற அப்பெண்மணியும் ஸித்தரைக் கண்ணுற்றுப் பாதப்ரக்ஷாளனம் முதலிய பூஜைகளைச்செய்து இன்சுவையுடன் கூடின அன்னபானாதிகளால் அவரை உபசரித்ததின்பல

னே இவ்வுத்தமகுலத்திற் பிறத்தற்கேதுவாயிற்று" எனத் திருவாய்மலர்ந்தது. இவ்விதம் தனது ஸந்தேகத்தை ஸம்ஹரித்த தந்தையினது திருவடிகளைப்பணிந்து சில மந்திரங்களைக் கற்றுக்கொண்டு அக்கிளி அவைகளால் அப்பூங்கொடியைத் துயர்க்கடலினின்றும் கறையேற்றிவைத்தது என இக்கதையை சம்பூர்ணம் செய்யலாயிற்று.

கே. எம். சுப்பிரமணிய சாஸ்திரி.

குறிப்பு.

இச்சரித்திரத்தால் நாமறிந்துகொள்ளவேண்டியது யாதுவெனில், பொதுவாய் சகலமான ஸ்திரீகளும் தம்தம் பதிகளிடம் அதிக அன்புடன் பிரீதிபாராட்டி, அவர்களிஷ்டம்போல் பணிவிடைசெய்து அவர்களால் செய்யப்படும் தர்மங்களுக்கு யாதொரு இடையூறும் செய்யாமல் தாமும் சகாயமாயிருந்து நன்கு நடைபெறச்செய்து பிறர்களால் தூஷணை சொல்வதற்கிடமில்லாமல் தம் வாழ்நாட்சள் பூராவும் நன்னடக்கையுடன் இருக்கவேண்டுமென்பதும், அப்படியிருந்தால் இவ்வுலகிலும் பரலோகத்திலும் மறுபிறப்பிலும் விசேஷ சிரேயஸ்ஸை யடைவார்கள் என்பதும், அவ்விதமில்லாவிடில் பல கஷ்டங்களை யனுபவிக்கவேண்டுமென்பதும் ஆம். ஆதலின், அவரவர்களும் சிரேயஸ்ஸை யடையவேண்டிப் பாதிவிரத்திய தர்மத்தைக் கைவிடாமல் அனுஷ்டிக்கவேண்டுமென்று அறிவிக்கப்படுகின்றது. சுபம்.

உபபத்திராதிபர்.

ஸ்ரீ ராமவிஜயம்.

(௯௪-வது பக்கத்தொடர்ச்சி.)

இவ்வற்புதமான காரியத்தைப் பார்த்து அவரைப்புகழாத வர் இல்லை. அடுத்த நிமிஷத்தில் சமுத்திரம்தாண்டி இலங்கைக் கரையிலுள்ள திரிகூடமலையின்மீது இவர் நிற்கக்கண்டார்கள். அதிலிருந்தபடியே இலங்கையையும் அதன் சிறப்பையும் பார்த் தார். கோட்டை வாயிலிடமாய் வந்தார். இலங்கையின் காவல் காரியான அங்நகரின் பெயருடைய ராக்ஷஸி இவரை உள்ளே புகவிடாமல் தடுத்தாள். நீ யார்? தடுக்கிறாய் என்று ஹனு மான் அவளை ஓர் அறை அறைந்தார். ராக்ஷஸி விலவிலத்துப் போய், ஏ வானரா! இவ்விதமான அறையை ஒரு வானரனி டம்பெற்று நான் கலகலக்கும்வரையில்தான் இந்தஇலங்கைக்கு வாழ்வு என்று பிரம்மதேவனது கட்டளை. சுகமாய் போய்வா ரும். உமது காரியம் பலிக்கும் என்று ஒதுங்கி வழிவிட்டாள். “நீ கொடுக்கும் வழி எனக்கு வேண்டாம்” என்று சொல்லி வேறோர் பக்கம் சென்று மதிலை இடித்து வழி பண்ணிக்கொ ண்டு உள்ளே பிரவேசித்தார். அப்பொழுது இரவுகாலம். அங் நாடு முழுவதும் சிரிப்பும் விளையாட்டுமாய் விளங்குவதைக்கண் டார். திவ்யமான சங்கீதமும் மனோகரமான நர்த்தனங்களும் அழகிய நாடகங்களும் விசித்திரமான தாசிதாசர்களின் கூட் டங்களுமே எங்கும் தென்பட்டன. “சுவர்க்கமும் இதற்கீடி ல்லை. அளகாபுரியும் இதற்கு நிகராகாது” என்று நினைத்தார். இச்சமயம் சந்திரன் ஆகாயத்தில் உலகம் அனைத்தையும் நில வில் வெள்ளையடித்துக்கொண்டு பிரகாசித்தார். அந்த நிலவின் உதவியைக்கொண்டு ஒரு இடுக்குக்கூடவிடாமல் அங்நகர் முழு தும் சீதாதேவியைத் தேடிவந்தார். வீதிகள், கடைகள், உத்தி யானவனங்கள் ஒன்று பாக்கியில்லாமல் புகுந்தார். வீடுகளெல் லாம் தேடினார். மாடமாளிகைகளிலெல்லாம் பிரவேசித்தார். மந்திரிகள் பிரதானிகளுடைய இல்லங்களெல்லாம் தேடினார்.

இராவணனுடைய அரண்மனையிற் புகுந்தார். பந்திபந்தியாய் நிற்கும் வீரர்களையும், அவர்கள் பூண்டிருக்கும் பிண்டியாலம் சூலம் முதலிய ஆயுதங்களையும் பார்த்து வியந்தார். கஜசாலை குதிரைலாயம் இரதவீதிகள் யாவையும் பார்த்துக்கொண்டு இராவணன் அந்தப்புரத்திற்சென்றார். புஷ்பகம் என்னும் விமானத்தில் அழகிந்திரன் என்று சொல்லும்படியான பெண்களின் கூட்டத்தைப் பார்த்தார். பலவிதமான விலாஸங்களை இராவணன் பிரியத்திற்காகச் செய்துவிட்டு எல்லோரும் அயர்ந்து நித்திரை செய்தார்கள். சிலர் கையில் வீணையும், சிலர் கையில் தாளங்களும், சிலர் கையில் மிருதங்கங்களும், சிலர் கையில் பானபாத்திரங்களும் காணப்பட்டன. தூக்கக் கலக்கத்தினாலும் மதுமயக்கத்தினாலும் கண்டபடியெல்லாம் படுத்து ஜன்ம சத்துருக்களான சக்களத்திகளையும் கட்டியணைந்துகொண்டு தூங்கும் பெண்மணிகளின் தன்மையையெல்லாம் கவனித்தார்.

இப்படிப் பார்த்துவரும்போது கண்ணைப்பறிக்கும் இரத்தினக்கட்டில் ஒன்றையும் அதில் நித்திரை புரியும் ஒரு பெண்கள் நாயகத்தையும் பார்த்து "ஈடுஜோடில்லாத ரூபமுள்ள இவள்தான் சீதையென்றெண்ணி சில நிமிஷங்கள் குதித்துக் கூத்தாடினார். வாலை முத்தமிட்டார். இங்குமங்கும் உலாவினார். பலவிதமும் விளையாடினார். சாதிக்குணம் மேலிட்டு உத்திரத்தில் வாலை மாட்டிக்கொண்டு ஏலேலோவென்று ஊஞ்சலாடினார். அடுத்த நிமிஷத்தில் "ஏகாந்தமாய் நித்திரை புரியும் ஸ்திரீகளை நாம் பார்ப்பது பிசகு, அவர்கள் தோன்றியபடி இருக்கும் சமயம் இது. என்ன முட்டாள்தனம் செய்தோம். நமது விரதமே போய்விட்டதே" என்று சிறிதுநேரம் தன்னையே வெறுத்துக் கொண்டார்.

மறுபடியும் ஆலோசித்து "நாம் சீதாதேவியைத் தேடவந்தோம். ஸ்திரீகளை ஸ்திரீகள் கூட்டத்தில் தேடலாமே தவிர மான் கூட்டத்தில் தேடினால் பார்க்கமுடியுமா? ஆதலால் நாம் இங்கு தேடியது நியாயமே. நமது மனம் பரிசுத்தமாக இருக்

கின்றதே தவிரச் சிறிதும் விகாரத்தையடையவில்லை. ஸ்ரீராம னுடைய நாயகியான சீதை இவளென்று நாம் நினைத்ததும் அறிவின் குறைவினால்தான். லோகநாதனான இராகவனை விட்டுப் பிரிந்தவள் கட்டில் முதலான சுகங்களைக் கனவிலும் விரும்பாள். இவளது அழகும் மனுஷ்யர்களில் காணக்கூடியதேதவிர தெய்விகமான லாவண்யம் பொருந்தியதல்ல" என்று சொல்லி, சற்று அப்புறம்சென்று, நக்ஷத்திரங்களின் நடுவில் சந்திரன் போலும் இப்பெண்களின்நடுவில் ஓர்சுப்ரமஞ்சத்தில் படுத்திருந்த ராக்ஷஸராஜனான ராவணனைப்பார்த்தார். கனவிலும் நினைக்கமுடியாத போகங்களை அனுபவித்துக்கொண்டு விளங்கும் அவனது ரூபத்தை உற்றுநோக்கினார். இவ்வளவு கம்பீரமான ரூபமும் இணையற்ற ஐசுவரியமுமுள்ள இந்த இராக்ஷஸராஜனுக்கு சீலம் மாத்திரம் இவ்வளவு துஷ்டமாகக் காணப்படுகிறதே என்று விசனங்கொண்டார்.

அங்கிருந்து புறப்பட்டு மற்ற விடங்களெல்லாம் தேடினார். அவர் போகாதவிடமில்லை. பிரவேசிக்காத சந்துகளில்லை. சுற்றிப்பாராத சுவர்களில்லை. இப்படி வெகுநேரம் தேடியும் சீதையைக் காணமல் "இந்த லங்காநகரம் முழுமையும் நாம் தேடியும் தேவியைக்காணவில்லையே. ஊசி நுழையக்கூடிய துவாரங்கள்கூட பாக்கியில்லாமல் வெகு ஜாக்ரதையாய்த் தேடினோமே தேவிக்கு எவ்விதமான உபத்திரவத்தை இக்கொடிய இராக்ஷஸன் புரிந்துவிட்டானோ? அல்லது தனது நிலைமையை சகிக்கமாட்டாமல் தேவிதான் ஏதாவது ஸாஹஸத்தைச் செய்துவிட்டாளோ? தேவியைப்பார்க்க பாக்கியமில்லாத இந்த ஜன்மத்தை நான் எதற்காக வைத்துக்கொள்ளவேணும்" என்று சொல்விக்கொண்டு வெகுநேரம் அபாரமான விசனசாகரத்தில் ஆழ்ந்தார். மறுபடியும் சமாதானம் செய்துகொண்டு கண்ணெடுத்துப் பார்க்கும்பொழுது தான் பாராமல் பாக்கிநின்ற அசோகவனம் தென்பட்டது. இவ்வனத்திற்குள் ஒருவேளை தேவியை பார்க்கலாம் என்று எண்ணி ஸ்ரீராமனையும் இலட்சுமணனையும் சீதாதேவியையும், பரமேசுவரன் முதலான தேவர்களையும் சந்

திர சூரியர்களேயும், சுக்கிரீவனேயும் மனதினுல் நமஸ்கரித்து சிறிது தியானத்திலிருந்தார். மனதில் சித்திரம் யெழுதியது போல் அவ்வசோகவனமும் அதன்நடுவில் ஒரு கிம்சுகவிருக்ஷமும் அதனடியில் சீதாதேவியும் தோன்ற, புளகாங்கிதமான சரீரத்துடன் அவ்வனத்தின் மதிலேத்தாண்டி லக்ஷ்மீகடாக்ஷத்திஞல் பரிபூர்ணமான ஒரு சோலேயின் உள்ளே பிரவேசித்தார்.

அத்தியாயம். 2.

கல்யாணமண்டபங்களும், மல்லிகை, முல்லே, இருவாட்சி, சண்பகம் முதலிய புஷ்பங்களும், குயில்கள், கிளிகள் முதலிய பக்ஷிகளும் அழகிய மான்களும் அற்புதமான மயில்களும் நிறைந்த அவ்வனத்தைப் பார்த்துக்கொண்டே மரத்துக்கு மரமாய் தாவி அம்மரங்களிலிருந்து விழுந்த புஷ்பங்களால் மறைந்த சரீரத்துடன் அனுமான் ஒரு கிம்சுக விருக்ஷத்தின் கிளேயில்வந்து நின்ருர். பக்கத்திலோடும் அழகிய நதியையும் அதன்கரையின் பெருமையையும் பார்த்தார். சுற்றுமுற்றும் பார்த்துவரும் போது அம்மரத்தினடியில் இருள்சூழ்ந்த சந்திரிகைபோல் ராக்ஷஸிகளின் நடுவடைந்தவளும் உபவாஸத்திஞல் மெலிந்த சரீரமும் நாள்பட்டு காந்திகுறைந்த உடையும், தூசி படிந்த ஆபரணங்களும் உடையவளாய் கண்களில் தாரை தாரையாய் நீர்பெருக ஸ்ரீராமனேயே மனதினுல் தியானித்து வீற்றிருப்பவளுமான வனிதாரத்னத்தைப்பார்த்து இங்கிதா காரங்களேக்கொண்டு இவளே சீதையென்று நிச்சயித்தார். நான் தேடிவரும் எனதன்னே சீதை இவர்களே. எங்கெந்த ஆபரணங்கள் தேவியின்சரீரத்தில் இருப்பதாக ஸ்ரீராமன் அடிக்கடி சொல்லி வருகிருரோ, அவைகளேயே தேவியின் அங்கங்களில் காண்கின்ரேம். இந்த தேவியை நினேத்தே இரவும் பகலும் ஸ்ரீராமன் தயையும், அன்பும், துக்கமும் ஆசையும் மேலிட்டுத்தவிக்கின்ருர்.

(இன்னும் வரும்)

கே. கல்யாணராம சாஸ்திரி.

தர்மம்.

(கூஉ-வது பக்கத்தொடர்ச்சி.)

ஆனல் சாஸ்திரப்படி இக்காலத்திற்குத் தக்கபடி அனுஷ்டிக்க முன்னோர்களே ஏற்பாடு செய்திருப்பதாய் முன்னம் கூறினீரே அது எங்கிருக்கிறதெனில் அதைப்பற்றிச் சற்றுக் கூறுகிறேன்.

कृते तु मानवा धर्माः त्रेतायां गौतमाः स्मृताः ।
द्वापरे शङ्खलितौ कलौ पाराशरः स्मृतः ॥

கிருதயுகத்திற்கு மனுதர்மசாஸ்திரமும், திரேதாயுகத்திற்கு கௌதமஸ்மிருதியும் துவாபரயுகத்திற்கு சங்கலிகிதர்களாலெ மூதப்பட்ட ஸ்மிருதியும், கலியுகத்திற்கு பராசரஸ்மிருதியும் கொள்ளத்தக்கதென்று ஆன்றோர்கள் கருத்து. ஆனல் இக்கலியுகத்திற்கு மனுஸ்மிருதி முதலியவை பிரமாணமற்றவையாவென்றெண்ணவேண்டாம். அவை ஒருக்காலும் அப்பிரமாணமாகமாட்டா. மற்று மனுஸ்மிருதி முதலியவைகளிற் கூறப்பெற்றிருக்கும் தர்மத்தை அப்படியே அனுஷ்டிக்க நமக்கு பலமும் ஆரோக்யமும் ஆயுஸ்ஸூம் உற்சாகமும் போதாது.

अरोगास्सर्वसिद्धार्थाः चतुर्वर्षशतायुषः ।
कृतत्रेतादिकेष्वेषामायुर्ह्रसति पादशः ॥

ரோகமற்றவர்களாயும் ஸமஸ்தகார்யங்களிலும் ஸித்திபெற்றவர்களாயும் 400 வயதுள்ளவர்களாயும் கிருதயுகத்தில் இருந்தார்கள். அப்புறம் ஒவ்வொருயுகத்தில் கால்பங்கு ஆயுஸ்குறைந்துவிடுவதாயும் சொன்னர். ஆகையால் நமக்கு அந்த ஸ்மிருதிகளை அனுஷ்டிக்க முடியாதென்றுகொண்டு பராசரர் பிரவர்த்தித்தார்.

(இன்னும் வரும்)

எம். என். சுப்பிரமணிய சாஸ்திரீ.